**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 162-2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW 1 | | Examined as : PW 1 | |
| Name | : ராமலிங்கம் | Defence | : |
| Father/Husband Name | : விஸ்வநாதன் | Court | : |
| Village | : முடிதிருச்சம்பள்ளி | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 65/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 20.02.2026.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

முதல் விசாரணை:–

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் நான் கும்பகோணத்திலிருந்தேன். அன்றயை தினம் இரவு 09.00 மணியளவில் எனக்கு செம்பனார்கோவில் போலிசார் போன் செய்து எனது அண்ணன் மகன் சுரேஷ் தெற்கு தெரு மெயின் ரோட்டில் வாகன விபத்தில் அடிப்பட்டதாக தகவல் சொன்னார்கள். பின்னர் நான் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கிருந்து அவரை திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக சொன்னார்கள். அங்கு சிகிச்சை பலனின்றி அவர் இறந்துவிட்டார். அவருக்கு ஏற்பட்ட விபத்து சம்பந்தமாக நான் செம்பனார்கோவில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த **கையொப்பம் மட்டும் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு பரிசீலனைக்கு பின்னர் அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கடந்த 11.07.2021 அன்று இரவு 07.30 மணியளவில் எனது அண்ணன் மகன் சுரேஷ் அவருக்கு

சொந்தமான TN 51 T 9828 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தை எடுத்துக்கொண்டு எங்களது உறவினர் ராஜரத்தினத்தின் மகன் வீரதினகரன் என்பவரை அழைத்துக்கொண்டு இரவு டிபன் வாங்கிகொண்டு திரும்பும் போது எங்கள் வீட்டிற்கு அருகில் வரும் போது எதிரே வந்த Scooty இருசக்கர வாகனம் நேருக்கு நேர் மோதியதில் சுரேஷ் என்பவருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று பின்னர் மேல் சிகிச்சைக்காக அவரை திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரிக்கு அழைத்து சென்றார்கள். அங்கு அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும் அது சம்பந்தமாக நான் புகார் கொடுத்ததாகவும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதற்காக உண்மை சம்பவத்தினை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 162-2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW 2 | | Examined as : PW 2 | |
| Name | : வீரதிணகர் | Defence | : |
| Father/Husband Name | : ராஜரத்தினம் | Court | : |
| Village | : முடிதிருச்சம்பள்ளி | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 43/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 20.02.2026.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

முதல் விசாரணை:-

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. சுமார் 2-3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை 07.00 மணியளவில் சுரேஷ் என்பவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் சுரேஷ் ஓட்ட பின்னால் நான் அமர்ந்துகொண்டு புரோட்டா வாங்கிகொண்டு திரும்பி வரும் போது பூம்புகார் மெயின் ரோட்டில் நாங்கள் சென்ற வாகனத்தில் மீது வேறொரு வாகனம் வந்து மோதியது. இரவு நேரம் என்பதால்எந்த வாகனம் மோதியது என்று நான் கவனிக்கவில்லை. அந்த விபத்தில் எனக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. என்னுடன் வந்த சுரேஷ் என்பவர் இந்த விபத்தினால் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். நான் மருத்துவமனையில் 15 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு பரிசீலனைக்கு பின்னர் அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கடந்த 11.07.2021 அன்று இரவு 07.30 மணியளவில் நானும் சுரேஷ் என்பவரும் அவருக்கு சொந்தமான TN 51 T 9828 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தை எடுத்துக்கொண்டு இரவு டிபன் வாங்கிகொண்டு திரும்பும் போது எங்கள் வீட்டிற்கு அருகில் வரும் போது எதிரே வந்த

Scooty இருசக்கர வாகனம் நேருக்கு நேர் மோதியதில் எனக்கும் சுரேஷ் என்பவருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. எங்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் என்றும், பின்னர் சுரேஷ் என்பவரை மேல் சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரிக்கு அழைத்து சென்றார்கள். அங்கு அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதற்காக உண்மை சம்பவத்தினை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.**